[பேரவைத் தலைவர்] [2024 ஜூன் 29

(ஓ) பேரவை நூலகக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 264(1)-ன்கீழ், 2024–2025 ஆம் ஆண்டிற்கான பேரவை நூலகக் குழுவிற்குப் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. J.L. ஈஸ்வரப்பன்
2. திரு. ப. கார்த்திகேயன்
3. திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்
4. திருமதி ஆ. தமிழரசி
5. திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா
6. திரு. ஆ. மகாராஜன்
7. திரு. வே. சம்பத்குமார்
8. திருமதி கு. மரகதம் குமரவேல்
9. திரு. A.P. ஜெயசங்கரன்
10. திரு. R. ராதாகிருஷ்ணன்

பேரவை விதி 264(3)-ன்கீழ், திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஔ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 268(i)-ன்கீழ், 2024–2025 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்குப் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. டாக்டர் இரா. இலட்சுமணன்
2. திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்
3. திரு. சீ. கதிரவன்
4. திரு. க. தேவராஜி
5. டாக்டர் வை. முத்துராஜா

6. திரு. அ.செ. வில்வநாதன்
7. திரு. கி. அசோக்குமார்
8. திரு. T.K. அமுல் கந்தசாமி
9. திருமதி கு. சித்ரா
10. திரு. K.A. பாண்டியன்
11. திரு. துரை. சந்திசேகர்

பேரவை விதி 268 (ii)-ன்படி, டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

12. பேரவைக் குழுக்கள், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் முடிந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் நியமனக் குழுக்களுக்கு நியமனம் செய்யப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களைத் தாங்கள் தற்போது அறிவித்தீர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனம் செய்யப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–15

10. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி 26-6-2024 அன்று நிறைவேற்றப்பெற்ற தீர்மானம்-கூட்டத் தொடர் என்பதற்குப் பதில் கூட்டம் என மாற்றி கால அவகாசத்தைக் குறைத்தல்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *கடந்த 26–6–2024 அன்று பேரவையில் விதிகளுக்கு மாறாக, தொடர்ந்து கோஷமிட்டுக்*